திருமதி த. இராசாம்பாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாணவர்களுக்கு புத்தகம் வழங்குவதில் வருகைப் பதிவேடு இவ்வளவு இருக்க வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளதா? அப்படியென்றால் அரசுத் தேர்விற்கு அனுமதிக்கப்படும் 75 சதவீதம் என்பதை அனுமதிக்கப்படுமா அல்லது 90 சதவீதம் என்று நிர்ணயித்துள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை. தனிக் கேள்வி போட்டால் விடையளிக்கப்படும்.

ஒட்டப்பிடாரத்தில் ஆதிதிராவிடர் மாணவர் இல்லத்திற்கான கட்டிடம் கட்டும் திட்டம்.

*வினா எண். 964— திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரத்தில் அரிசன மாணவர் இல்லத்திற்கு அடித்தளம் போடப்பட்டு 3 ஆண்டு காலமாகியும் இன்றுவரை கட்டிடம் கட்டப்படாமல் இருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக கட்டி முடிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: (அ) மற்றும் (ஆ) ஆதி திராவிட மாணவர்கள், தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்காக 1974-ல் (விடுதி) கட்டடங்கள் கட்டத் தேர்ந்தெடுக்கப்பட்ட 150 விடுதிகளில் திருநெல்வேலி மாவட்டம் ஒட்டப்பிடாரத்தைச் சார்ந்த ஆதிதிராவிடர் மாணவர் விடுதியும் ஒன்றாகும். ரூ. 2.23 இலட்சம் செலவில் மேற்கண்ட விடுதிக்கு கட்டிடம் கட்ட அரசு ஆணை எண். 86, சமூகநலத்துறை, நாள் 5-2-80-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டது. தற்பொழுதுள்ள மற்றும் கட்டடப் பொருட்களின் விலைவாசி ஏற்றத்தினால் அரசு அளித்த ரூ. 2.23 இலட்சம் தொகை போதாது எனவும் அதிகத் தொகைக்கான மதிப்பீடு ஒன்றை அரசின் ஏற்புக்காகத் தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் இயக்குநர் அனுப்பியுள்ளார். இதுபோன்று வேறுசில மாணவர் இல்லங்கள் கட்டுவதற்கான திருத்திய மதிப்பீடும் வந்துள்ளன. இவைகளின் மீது அரசு முடிவெடுத்தவுடன் கட்டிட வேலைகள் விரைவில் தொடங்கப்படும்.

[முற்பகல் 10–10]

திரு. சோ. அழகர்சாமி: ஒட்டப்பிடாரத்திலுள்ள அரிசன மாணவர் இல்லத்திற்கு அடித்தளம்போட்டு மூன்று ஆண்டுகள் ஆகின்றன என்று சொல்லப்படுகிறது. இப்போது இந்த மதிப்பீடு, முன்னால் இருந்ததை விட விலைகள் உயர்ந்துள்ள

காரணத்தால் மதிப்பீட்டை உயர்த்திப் போட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். ஆகவே காலதாமதம் ஆகஆக ஆண்டுக் காண்டு முதலீடு உயர்ந்து கொண்டே போகும். ஆகவே, உடனடியாக அடித்தளம் போட்டவுடனே கட்டடம் கட்டக் கூடிய முறையில இனிமேலாவது இந்த ஒட்டப்பிடாரத்தில் உள்ள இந்த மாணவர் இல்லத்தை துரிதமாகக் கட்டிமுடிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு எம். விஜயசாரதி; அரசைப் பொறுத்தவரையில் விரைவில் இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. நன்னிலம் அ. கலையரசன்: மாவட்ட அரிசன நல அலுவலகத்தில் பணியாற்றக் கூடிய சூப்பர்வைசர்களுக்கு ரூ 500-க்குள் ளேதான் பள்ளிக்கூடங்கள் கட்ட முடியும் என்ற விதிமுறை இருக்கிறது. இந்த விதிமுறை ஐந்தாண்டுகளுக்கு முன்பு ஏற்படுத்தப்பட்ட விதியாகும். ஆகவே, இப்போது கல்லின் விலை, சிமெண்ட் விலை போன்றவை அதிகரித்துக் கொண்டிருப்பதால் அந்த சூப்பர்வைசர்களுக்கு விதிக்கப்பட் டிருக்கிற இந்த ரூ. 5,000 என்ற வரம்பினை உயர்த்தி ஆரம்ப பள்ளிக்கட்டடங்கள் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு எம். விஜயசாரதி: அரசு பரிசீலனை செய்யும்.

மலைவாழ் மக்களுக்கென தனிக் கடன் நிவாரணச் சட்டம்.

*வினா எண். 965)— திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) மலைவாழ் மக்களுக்கென தனிக் கடன் நிவாரணச் சட்டம் இயற்றப்படுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது இயற்றப்படும்?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: (அ) மலைவாழ் மக்களுச்கென தனிக் கடன் நிவாரணச் சட்டம் விரைவில் இயற்றப்படும்.

(ஆ) அரசின் பரிசீலனையிலிருக்கிறது.

திரு. சி. சிவப்பிரகாசம்; மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுமபோது நிவாரணச் சட்டம் பரிசீலனையில் உள்ளது கூறினார்கள். இது மூன்று ஆண்டுகளாகவே பரிசீலனையில் இருப்பதாக தெரிகிறது. இந்தச் சட்டத்தை நிறைவேற்றி செயலாக்காததால் பல்லாண்டுகளாக மலைவாழ் பகுதி மக்கள் தங்கள் நிலங்களையும் பலன் தரும் மரங்களையும் குறைந்த பணத்திற்கு வட்டியாகச் செலுத்தி வருகிறார்கள். இதனால் அவர்களது பொருளாதார நிலை வெகுவாகப் பாதிக் கப்பட்டுள்ளது. ஆகவே இதை சீராக்க விரைவில் இந்த புதிய ட்டத்தை பரிசீலனை செய்து நிறைவேற்ற அரசு முயலுமா?